## தேர்தலில் வெற்றி பெற்று – பின்னர்

# பதவி விலகி மீண்டும் தேர்தலில் நிற்பது அரசியல் சட்டப்படி செல்லுபடியாகுமா?

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கேள்வி!

சென்னை, செப்.22-

தேர்தலில் ஒருமுறை நின்று வெற்றி பெற்று, பிறகு பதவி விலகி, மீண்டும் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அதே பதவியில் அமர அரசியலமைப்புச் சட்டத்தில் இடம் இருக்கிறதா? நாட்டின் ஜனநாயகம், பொது ஒழுக்கம், அரசியலமைப்புச் சட்டத்தைக் காப்பாற்றும் வகையில் சட்ட நிபுணர்கள் பரிசீலிக்க வேண்டும் என்றார் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள்.

தந்தை பெரியாரின் 148–ஆவது பிறந்த நாளான 17.9.2026 அன்று காலை சென்னை பெரியார் திடலில் உள்ள அவரது நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்திய திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார்.

அப்பேட்டியின் விவரம் வருமாறு:-

**மதுரை மீனாட்சியம்மனுடைய குடமுழுக்கில் தமிழ்ப் புறக்கணிப்பு, ஏன்?**

மதுரையிலே மீனாட்சியம்மனுடைய கோயில் குடமுழுக்கு என்ற பெயராலே பல நிகழ்ச்சிகள் அங்கு நடந்து, அதிலே அறங்காவலர்கள் பற்றி எல்லாம் பிரச்சினைகள் வந்திருக்கின்றன. அதை எல்லாம் தாண்டி இன்றைக்கு இன்னொரு செய்தி வந்திருக்கிறது. தந்தை பெரியார் பிறந்த நாள் விழா என்றால், ஜாதி ஒழிப்பு நாள் என்று அர்த்தம், தீண்டாமை ஒழிப்பு நாள் என்று அர்த்தம். தமிழுக்கு முன்னிடம் கொடுக்க வேண்டும் என்பதுதான், தாய்மொழிக்கு முன்னிடம் கொடுக்க வேண்டும் என்பதுதான் மிக முக்கியமானது.

அப்படி இருக்கும்போது, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தலைமையிலே, மு.க.ஸ்டாலின் அவர்களுடைய ‘திராவிட மாடல்’ ஆட்சி சிறப்பாகப் பணியாற்றியதினுடைய முத்தாய்ப்பு சாதனை, அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் என்று அதை நடைமுறைப்படுத்தி, உச்சநீதிமன்றத்திற்குச் சென்று, அன்றைக்கு நியமனங்களைச் செய்தது மட்டுமல்லாமல், தமிழ் ஓதுவார்களை எல்லாம் உள்ளே விட்டுப் பாடக்கூடிய அளவுக்குத் தமிழ் மொழியாம் செம்மொழிக்கு அதுவரையில் இருந்த தடைகளை அகற்றினார்கள்.

**தமிழ் ஓதுவார்களை அவமானப்படுத்துவதா?**

ஆனால், இன்றைக்குக் காலையில் வந்திருக்கிற செய்திப்படி, அங்கே ஓதுவார்களை எல்லாம் இன்றைய தமிழ்நாடு அரசு கைது செய்தது அல்லது வெளியே வரவிடவில்லை. அவர்களை அவமானப்படுத்தினார்கள். தமிழ் ஓதுவார்களுக்கு இடமில்லை என்று சொல்லுகிறபோது, தமிழையே கொச்சைப்படுத்துவது மாதிரி ஆகும். அது சரியான தகவலாக இருக்குமேயானால், நிச்சயமாக திராவிடர் கழகம், ஒத்த கருத்துள்ள அத்துணைத் தோழர்களும் இணைந்து கண்டிக்கிறோம்.

இன்னும் கேட்டால் மதுரையிலேதான், பல சங்கங்கள், தமிழ் சங்கங்கள் உருவாயின. அந்த மதுரையிலேயே தமிழ் பேசக்கூடியவர்கள், தமிழ் பாடக்கூடிய ஓதுவார்களுக்கெல்லாம் இடமில்லை குடமுழுக்கில் என்று சொல்லுகிறார்கள். இந்த லட்சணத்தில், சமஸ்கிருதத்தோடு, தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும் என்றெல்லாம் நீதிமன்றங்களிலே சொல்லப்பட்டது, என்னாயிற்று அது? காற்றில் பறந்ததா? என்று தெரியவில்லை. ஆகவே, அதைக் வன்மையாகக் கண்டிக்கி றோம்.

தந்தை பெரியார் பிறந்த நாள் என்றால், அது வேடிக்கை நாள் அல்ல. தந்தை பெரியார் பிறந்த நாள் என்றால், ஜாதி ஒழிப்புக்குத் தொடர்ந்து போராடுகிற நாள். சமத்துவத்திற்காகப் போராடுகிற நாள்.

**போட்டியிடுவதுபற்றி நீதிமன்றம் என்ன சொல்லுகிறது?**

இன்னொரு முக்கியமான தகவல் வந்திருக்கிறது, என்னவென்று சொன்னால், தமிழ்நாட்டில் மதுராந்தகம், தாராபுரம் ஆகிய இரண்டு தொகுதிகளுக்கு இடைத்தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன. மேற்சொன்ன இரு தொகுதிகளிலும், ஆளுங்கட்சியின் வேட்பாளர்களாக யார் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், எதிர்க்கட்சியில் நின்று வெற்றிபெற்ற இரண்டு பேர், அதே வேட்பாளர்கள்



தங்களது பதவி யிலிருந்து விலகி, தாங்கள் ஆளுங்கட்சியில் சேர்ந்தால், தங்களுக்குச் சில, பல பதவிகள் கிட்டக் கூடும் என்ற நோக்கில் சேர்ந்தார்கள். அது பிரச்சினையாகி, அதிமுகவிலிருந்து சென்றதால், அவர்களுக்கு ஆட்சேபணை எழுந்தது. இந்த நிலையிலே அதே வேட்பாளர்கள், அதே தொகுதியில் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டு இருக்கிறார்கள்.

இந்தஇடைத்தேர்தல்திணிக்கப்பட்ட தேர்தலாக இருக்கிறதே தவிர, இயல்பாக நடந்த தேர்தலாக இல்லை என்ற குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது. 16.9.2026 அன்று விசாரித்த உயர்நீதிமன்ற இரண்டு நீதிபதிகள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். “இப்படி காரணமில்லாமல், தேவையில்லாமல் இரண்டு பேர் அதே வேட்பாளர்கள் மீண்டும் நாங்கள் நிற்கிறோம் என்பது சரியா? முதலில், வெற்றி பெற்ற தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகுவது; மூன்று மாதத்துக்குள்ளாக, மறுபடியும் நாங்கள் அங்கேயே நிற்கிறோம் என்பது சரியா? என்று சொல்லுவது இருக்கிறதே, அது ஜனநாயகத்தினுடைய சிறப்பான அம்சம் அல்ல. இது தடுத்து நிறுத்தத் தனிச் சட்டமே கொண்டுவர வேண்டும் என்று நீதிபதிகள் தெளிவாகச் சுட்டிக்காட்டி இருப்பது வாக்காளர்களின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டியது.

எங்களைப் போன்ற இயக்கங்கள், கட்சிகளுக்கு அப்பாற்பட்டு தேர்தலில் நிற்காமல் ஆனால் பொது ஒழுக்கம் காப்பாற்றப்பட வேண்டும். ஜனநாயகத்தினுடைய உண்மைத் தன்மை சிதைக்கப்படக் கூடாது என்ற அக்கறையும், ஆர்வமும் உள்ள எங்களைப் போன்றவர்கள் அதைச் சுட்டிக்காட்ட வேண்டியது கடமையாகும்.

**சட்ட ரீதியாக இன்னொரு நிலை என்ன?**

அதோடு, சட்டரீதியாகவே இன்னொரு நிலை, நீதிமன்றம் உள்பட இந்த பகுதிக்குச் சென்றார்களா? இது உயர்நீதிமன்றத்தினுடைய கவனத்திற்குச் சென்றதா? என்று வழக்கு போட்டவர்கள் மூலமாகத் தெரியவில்லை. சட்டப்படி ஓர் அம்சத்தைச் சொல்ல வேண்டும், அதிலே கொஞ்சம் சட்டப் பிரச்சினைதான். என்னவென்றால், இந்த பத்தாவது ஷெட்யூல் என்று ஒன்று இருக்கிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில், பத்தாவது அட்டவணை. கட்சித் தாவலைப்பற்றி ஒரு தனி சட்டங்கள் என்னென்ன வந்ததோ, அந்தச் சட்டங்களை எல்லாம் மய்யமாக வந்திருக்கக்கூடியதுதான் பத்தாவது அட்டவணை.

**இந்திய அரசியலமைப்புச் சட்ட பத்தாவது அட்டவணை என்ன சொல்லுகிறது?**

பத்தாவது அட்டவணைப்படி, ஒரு தடவை ராஜி னாமா செய்துவிட்டு, அதே நபர் மறுபடியும் அந்த சட்டமன்றத்திலே உள்ளே போய் அமர உரிமை இல்லை என்று அரசியலமைப்புச் சட்டத்தினுடைய பிரிவுகள், 164(1B), 191(2) ஆகியவை தெளிவாகச் சொல்லுகின்றன என்று வருகிறபோது, மீண்டும் அவர்களுக்கு அங்கே உட்காரக்கூடிய வாய்ப்பு கிடையாது.

எனவே, சட்டத்தைச் சரியாக ஆராய்ந்தால், இந்த வேட்பு மனுவே செல்லாத ஒன்றாக ஆக்கப்படும். அவர்களுக்கு மீண்டும் போட்டியிடக் கூடிய தகுதி இல்லை என்பது அரசியலமைப்புச் சட்டத்தினுடைய நிலை.

நீதிமன்றம் சொல்லியிருப்பதற்குக் கூடுதலாகத் தகவலை, நீதிமன்றத்திற்கும் சேர்த்து நாங்கள் சொல்லு கிறோம்.

ஆகவேதான், இந்த ஊடக வாயிலாக இந்த நிலையைச் சம்பந்தப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளும் குறிப்பாக நோக்க வேண்டும். ஆளுங்கட்சியாக இருந்தா லும் சரி, நாங்கள் நினைத்ததெல்லாம் செய்வோம் என்று சொல்வதற்கு முடியாது. அரசியலமைப்புச் சட்டம் இருக்கிறது. சட்டமன்றம் ஒன்றும் சாதாரண ‘கிளப்’ கிடையாது, போய் உள்ளே உட்கார்ந்து விடுவதற்கு.

ஆகவே, சட்டமன்றம் விதிகளை வைத்து நடப்பது. அதுவும் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்வது – அரசியலமைப்புச் சட்டத்தின் பெயரால்; அந்த அரசிய லமைப்புச் சட்டத்திலே இருக்கக்கூடிய சட்ட நிலையை உங்கள் மூலமாக இன்றைக்கு விளக்கி யிருக்கிறோம்.

**ஒருமுறை பதவி விலகிவிட்டு, அதே நபர் மறுபடியும் தேர்தலில் போட்டியிட்டு, அதே பதவியில் அமர முடியாது!**

தேர்தலில் போட்டியிடக்கூடிய அரசியல் கட்சிகள் இதனை ஆழமாகப் பரிசீலிக்க வேண்டும். சட்ட ரீதியாக இதற்கு ஒரு தீர்ப்புக்கு ஏற்பாடு செய்துவிட்டு, தீர்வு கண்டால், அதற்குப் பிறகு இந்தத் தேர்தல் நடந்தால்தான் சரியாகும்.

இப்போது என்ன சிக்கல் வரும் என்றால், இந்தத் தேர்தல் செல்லாது, வெற்றி பெற்றால், யார் வெற்றி யும் செல்லாது என்று சொல்லக்கூடிய அளவுக்கு வந்தால், ஏற்கெனவே ஒரு செலவு, அதற்கு மேலே திணிக்கப்பட்ட தேர்தலுக்கு மேலும் ஒரு செலவு! இன்னொரு திணிக்கப்படக்கூடிய தேர்தலுக்குரிய ஒரு அபாயக் காலகட்டம் நெருங்குகிறது.

**சட்ட நிபுணர்கள் ஆழ்ந்து சிந்திப்பார்களாக!**

ஆகவேதான், பொதுவாக இருக்கிறவர்கள் சார்பாக, பொது ஒழுக்கத்தையும், ஜனநாயகத்தையும், அரசியலமைப்புச் சட்டத்தையும் காப்பாற்றுகின்ற கண்ணோட்டத்தோடு, இதைப் பொது மக்களுக்கு நாங்கள் விளக்கி இருக்கிறோம். சட்டமன்ற நிபுணர்கள் ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டும். உயர்நீதிமன்றத்தினுடைய கவனம் இதில் பாய வேண்டும் என்று கூறி முடிக்கிறேன்,

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் செய்தியாளர்களிடையே கூறினார்.

---

## தமிழகத்தில் அறிவிக்கப்படாத மின்வெட்டு - 24 மணி நேரத்தில் 8 படுகொலைகள்!

# சட்டம் - ஒழுங்கு சீரழிவு: அரசு மவுனம் காக்காமல் உடனடியாகச் செயல்படுமா?

## தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் கேள்வி!

சென்னை, செப். 22–

தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் அறிவிக்கப்படாத மின்வெட்டு உள்ளது. மேலும் 24 மணி நேரத்தில் 8 படுகொலைகள் காரணமாக சட்டம் –ஒழுங்கு சீரழிந்துள்ளது. எனவே அரசு மவுனம் காக்காமல் உடனடியாக செயல்படுமா என்று தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா எம்.எல்.ஏ. கேள்வி எழுப்பியுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: சிவகங்கை மாவட்டத்தில் நடந்த இரட்டைக் கொலை சம்பவம் பொதுமக்களிடையே மிகப்பெரிய அச்சத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

மதுரையில் ஜெய்ஹிந்த்புரம் காவல் நிலையம் அருகே ஒருவர் நடுரோட்டில் விரட்டிச் சென்று வெட்டி படுகொலை, கிருஷ்ணகிரி அருகே டாஸ்மாக் கடையுடன் தொடர்புடைய இடத்தில் ஏற்பட்ட தகராறில் 33 வயது இளைஞர் கல்லால் தாக்கப்பட்டு உயிரிழந்த சம்பவமும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த படுகொலைகளுக்கும், தமிழ்நாட்டில் சட்டம்–ஒழுங்கு சீர்குலைந்த



தற்கும் அரசு என்ன பதிலளிக்கிறது.

நெய்வேலி என்.எல்.சி. திட்டங்களுக்காக விவசாய நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வரும் நிலையில், ஏற்கனவே நிலம் வழங்கிய விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை அரசு முதலில் உறுதி செய்ய வேண்டும். முதலில் ஏற்கனவே நிலம் வழங்கிய மக்களுக்கான வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள், அதன் பின்னரே புதிய விளைநிலங்களை கையகப்படுத்துவது குறித்து பேசுங்கள்.

தமிழ்நாட்டில் டெங்கு பாதிப்புகளும், உயிரிழப்புகளும் நடந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. எனவே, அரசு வெறும் அறிவிப்புகளோடு நிற்காமல், களத்தில் தீவிரமான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். திருச்சி மாவட்டத்தில் ரூ.247.15 கோடி பயிர்க்கடன் 50,779 விவசாயி களுக்கு தள்ளுபடி செய்யப்பட்டதாக கூட்டுறவுத்துறை தெரிவித்துள்ளது. ஆனால், முழுமையான கடன் தள்ளுபடியே தங்களது கோரிக்கை என்று விவசாயிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

**மீனவர்கள் மத்தியில் அச்சமும் - எதிர்ப்பும்!**

சென்னை பட்டினப்பாக்கம் பகுதியில் தலைமைச் செயலகம் தொடர்பான அறிவிப்பு குறித்து மீனவர்கள் மத்தியில் அச்சமும், எதிர்ப்பும் ஏற்பட்டுள்ளது. அந்த பகுதியின் மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான கவலைகளை அரசு உரிய முறையில் பரிசீலிக்க வேண்டும். கர்நாடக அரசை உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி மீண்டும் காவிரியில் தண்ணீர் திறக்க தமிழக முதல்வர் விவசாயிகள் நலன் கருதி வலியுறுத்துவாரா?

**இன்றைய தமிழ்நாட்டின் மக்கள் கதி என்ன?**

தமிழகத்தில் அறிவிக்கப்படாத மின்வெட்டு பாதிப்பால் ஒருபுறம், டெங்குவால் பொதுமக்கள் பாதிப்பு ஒருபுறம், கொசு கடியால் மக்கள் அவதி ஒருபுறம், இந்த நிலையில் இன்றைய தமிழ்நாடு, மக்கள் கதி என்ன?. திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் அறுவடை செய்யப்பட்ட நெல் மூட்டைகள் மழையால் பாதிக்கப்பட்டுள்ளது.

விருத்தாசலம் சின்னப்பரூர் மற்றும் பல கிராமங்களில் ஆயிரக்கணக்கான நெல் மூட்டைகள் கொள்முதல் செய்யாததனால் மழையில் நனைந்து வீணாவதை அரசு எப்போது தடுக்கப் போகிறது?. இப்படி பல்வேறு மக்கள் பிரச்சினைகளுக்கு அரசு மவுனம் காக்காமல் உடனடியாக செயல்படுமா?. இல்லையெனில் செவிடன் காதில் ஊதிய சங்கு போல இந்த அரசு என்று மக்கள் முடிவு செய்வார்கள்.

இவ்வாறு பிரேமலதா வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

---

## ஆண்டவன் சாட்சியாக



மின்வெட்டுக்கு
தீர்வு கேட்டா

பஞ்சாப்பை
பாருங்குது
ஒன்னு

ஆந்திராவை
கை காட்டுது
இன்னொன்னு..

அது சரி...

சோறாக்கும்
அரிசி விலை
ஆழாக்கிற்கு
பத்து ரூபா ஏறிடுச்சேன்னு
கேட்டா

“சோமாலியாவை
பாருன்னு”

அடுத்ததாக
ஒன்னு
அறிவாக
பேசும் பாரு...

ஆக...

லண்டனுக்கு
போய்வந்த
தண்டக்காரியம்
குறித்து

ஊடகத்தை
கூட்டிவச்சு
உலகுக்கு சொல்ல

ஒன்னுக்கும்
துப்பில்லை...

அரிசி பருப்பு
விலை எல்லாம்
ஆகாயம்
நோக்கி

ஆளத்
தெரியாத
மக்குகளால்

மாநிலத்தின்
வளர்ச்சி
பாதாளம் நோக்கி...

ஆறு கோடி
செலவு செஞ்சு

மேட்டூர்ல
சூட்டிங்
நடத்திய
காவேரித்தண்ணி
அடுத்த ஊரு
தாண்டுறதுக்குள்ள
ஆவியாகிப்
போச்சு...

படுகை விவசாயம்
பதராகி
உழுது நடாமலே
சாவியாப் போச்சு...

துருப்பிடுச்ச
வண்ணத்தில்
இந்த
துக்ளக் ஆட்சி

துயரங்கள்
தொடரவே

அன்றாடம்
நடக்கும்
ஆதாயக்
கொலைகளால்

சென்னை
முதல்
சிவகங்கை
வரை
சீரழியும்
காட்சி...

ஆக
மொத்தத்தில்

சீர் கெட்ட
பிளாக் டிக்கெட்
ஆட்சியால்

ஊர் கெட்டுக்
கிடப்பதற்கு

“பழனி மலை
முருகன்
முதல்

மாமதுரை
மீனாள்” வரை

அல்லாடும்
தெய்வங்களே

சத்தியமா
சாட்சி...

என்னநாஞ் சொல்றது



**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்*